எம்.சி.ஓ.பி எண்: 539 /2020 தேதி: 04.06.2026

மசா. : 1

பெயர் : ஆரோக்கிய சுதாகர்

த/பெ. : அண்ணமரியான் பேர்னன்டொ

வயது :60

**சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் மகனுக்காக நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். என் மகன் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல முடியாது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. அவர் நேரில் நீதிபதி முன்பு வந்தபோது நீதிமன்றம் அவரால் சாட்சி சொல்லமுடியாது என்று தீர்மானம் செய்தது. என் மகனுக்கு ஏற்பட்ட விபத்து குறித்து எனக்கு நேரடியாக தகவல் தெரியாது. விபத்து 13.11.2019 அதிகாலை 2.30 மணிக்கு நடந்தது. முந்தைய நாள் அலுவல் வேலையாக செல்வதாக சொல்லிவிட்டு சென்றார். பிரமாணவாக்குமூலத்தில் சொந்த வேலையாக சென்றதாக குறிப்பிட்டேன். அவருடைய அலுவல் வேலையை தான் அப்படி சொன்னேன். விபத்து குறித்து சென்னை ராஜுவ் காந்தி அரசு மருத்துவமனையிலிருந்து எனக்கு தகவல் கொடுத்தார்கள். காவல் நிலையத்தில் புகார் நான் கொடுக்கவில்லை. விபத்து சமயத்தில் என் மகன் புல்லட் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றார். அது என் மகனின் நண்பருக்கு சொந்தமானது. என் மகன் ஓட்டிச்சென்ற வாகனத்தின் ஆர்சி புக் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஞாபகம் இல்லை. அந்த வாகனத்திற்கு காப்பீடு உள்ளதா என்றால் தெரியாது. வண்டியின் பின்பக்கம் என் மகனின் நண்பர் அமர்ந்து சென்றார். என் மகன் ஓட்டிச்சென்ற வாகனத்திற்கு ஆர்சி புக், பாலீசி இல்லை என்பதால் என் மகனின் நண்பர் இழப்பீடு கிடைக்கவேண்டி பொய்யான தகவலை காவல் நிலையத்தில் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமான குற்ற வழக்கு குறித்து எனக்கு தெரியாது. விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகன் ஓட்டிச்சென்ற வாகனத்திற்கு முன்பக்கம் சேதம் அடைந்து உள்ளதால் என் மகன்தான் கவனக்குறைவாக ஓட்டிச்சென்று லாாியின் பின்பக்கம் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. லாாி மீது தவறு என்பதற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்பதால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல. விபத்து சமயத்தில் என் மகன் தலைக்கவசம் அணியாமல் சென்றதால் தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மகன்

தலைக்கவசம் அணிந்திருந்தார். என் மகனுக்கு முதலில் ராஜுவ் காந்தி அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை வழங்கப்பட்டது. அதன் பிறகு சிம்ஸ் மருத்துவமனையில் ஒரு நாள் பரிசோதனைகள் முடித்து அன்றே சூரியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தலையில் அறுவை சிசிச்சை செய்யப்பட்டது. மசாஆ 3 ஆவணம் கலர் ஜெராக்ஸ் என்றால் சரியல்ல. அதனுடைய அசல்தான் தாக்கல் செய்திருக்கிறேன். மசாஆ 7 ஆவணத்தில் நிறைய பில்கள் கையெழுத்து இல்லாமல் உள்ளது என்றாலும் நிறைய பில்கள் ஜெராக்ஸ் பில்கள் என்றாலும் சரியல்ல. ஜெராக்ஸ் பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அந்த மருத்துவமனையின் மருத்துவர் சாட்சி அளித்ததால்தான் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல. அசல் பில்களை மருத்துவ காப்பீடு மூலம் தொகை பெற்றுக்கொண்டேன் என்பதால் அசல் பில்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தொடர்சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மகன் இள நிலை பட்டம் பெற்றுள்ளார். எந்த பிரிவு என்று எனக்கு ஞாபகம் இல்லை. கப்பலில் வேலை செய்வதற்குரிய படிப்புகள் படித்துள்ளார். அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. என் மகன் எம்எஸ்ஐ சிப்பிங் சர்வீஸ் இண்டியா பிரைவேட் லிமிடெட் என்ற சிப்பிங் கம்பெனியில் Wiper வேலை செய்தார். என் மகன் எந்த வருடத்தில் வேலைக்கு சேர்ந்தார் என்று எனக்கு ஞாபம்இல்லை. என் மகன் வேலை நிரந்தர வேலை. தனியார் கம்பெனியில் எப்போது வேண்டுமானாலும் வேலையிலிருந்து நீக்கமுடியும் என்றால் எனக்கு தெரியாது. என் மகன் கப்பலில் பயணம் செய்து வேலை செய்தார். என் மகன் கப்பலில் தொடர்ச்சியாக 6 மாதம் முதல் 1 வருடம் வரை இருந்துள்ளார். கப்பலில் போகாத நேரம் ஊரில் இருப்பார். வீட்டில் இருக்கும் நாட்களுக்கு சம்பளம் கிடையாது. என் மகனின் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யவில்லை. படிவம் 16 தாக்கல் செய்யவில்லை. வங்கி கணக்கு விவரத்தை வைத்துக்கொண்டு என் மகனின்சமபளத்தை தீர்மானம் செய்யமுடியாது என்றாலும் அவர் வேலை செய்த நிறுவனத்தை சேர்ந்தவர் சாட்சி சொன்னதால்தான் தீர்மானம் செய்யமுடியும் என்றால் சரியல்ல. என் மகன் கைதாங்கலாக நடக்கமுடியும். கேட்கும் திறன் உள்ளது. என் மகனுக்கு எந்த வித நிரந்தரஊனம் கிடையாது என்றால் சரியல்ல. மசாஆ 14 ஆவணம் இந்த வழக்கிற்காக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. விபத்து என்னுடைய மகனின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.